# 11 ஈழத்து ஆலயங்கள்

## அ. விநாயகர் ஆலயம்

### முறிகண்டி விநாயகர் ஆலயம்



முல்லைத்தீவு மாவட்டத்தில், யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இங்கு பிள்ளையார் வழித்துணைப் பிள்ளையாராக வீற்றிருக்கிறார். இவ்வாலயத்தைக் கடந்தே, வடபகுதியை அடைய முடியும். எனவே, இவ்வீதியினூடாகப் பயணிக்கும் பயணிகள், இவ்வாலயத்தில் தரித்து நின்று, பிள்ளையாரை வழிபட்ட பின்னரே, தம் பயணத்தைத் தொடருவர்.

மிகச் சிறிய ஆலயத்தில் குடி கொண்டிருக்கும் இவ் விநாயகரின் மகிமையோ பெரிது. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி மிக்கவர். பொங்கல், சோறூட்டல் போன்ற சடங்குகளும் இங்கு நடைபெறுவதுண்டு.

அன்று தொட்டு இன்று வரை சிறியதொரு குடிலினுள்ளேயே இவ்விநாயகர் அமர்ந்துள்ளார். மூன்று வேளை பூசைகள் நடைபெறுகின்றன.

## ஆ. சிவாலயம்

### முன்னேஸ்வரம்



வரலாற்றுப் புகழ்மிக்க இவ்வாலயம், சிலாபம் நகரிற்கு அண்மையில் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன முறையாய் அமைந்த இத்திருத்தலம், அழகேஸ்வரம் எனவும் வழங்கப்படுகிறது.

இவ்வாலயத்தின் இறைவன் பெயர் முன்னைநாதர்; இறைவி பெயர் வடிவாம்பிகை; தலவிருட்சம் அரசமரம்; தீர்த்தம் மாயவனாறு (தெதுறு ஓயா).

இராமன், இராவணனைக் கொன்றதால் வந்த பிரம்மஹத்தி தோஷத்தை இவ்வாலயத்தில் வழிபட்டு நீக்கினான் என்று புராண வரலாறு கூறும். அடியார்கள் இவ்வாலயத் தீர்த்தத்தில் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவர்.

இத்தலத்தை இராமன், வியாசர் முதலியோர் வழிபட்டதாகத் தட்சி ணகைலாய புராணம் குறிப்பிடுகிறது. குளக்கோட்ட மன்னனும், 6ஆம், 9ஆம் பராக்கிரபாகு மன்னர்களும் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்தும் மானியங்கள் வழங்கியும் தொண்டு செய்துள்ளனர்.

போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வாலயம் அவர்களால் அழிக்கப்பட்டு, பொருட்களும் சூறையாடப்பட்டன. பிற்காலத்தில் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

என்ற மன்னன், இந்தியச் சிற்பிகளைக் கொண்டு ஆலயத்தை மீள அமைத்துக் கும்பாபிஷேகமும் செய்வித்தான்.

இவ்வாலயத்தில் வருடந்தோறும் இரு மகோற்சவங்கள் நடைபெறுகின்றன. மகோற்சவ காலத்தில் 63 நாயன்மாருக்கு நடைபெறும் பக்தோற்சவமும், வேட்டைத் திருவிழாவும் சிறப்பானவை. ஏனைய நித்திய, நைமித்திய கிரியைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆலயத்துக்கு உரிய பல தனித்துவமான மரபுகளையும், வரலாறுகளையும் கொண்ட இவ்வாலயம் தமிழ், சிங்கள மக்களின் ஒற்றுமைக்குப் பாலமாகவும், ஈழத்து மக்களின் ஆன்மீக விருத்திக்கு ஆதாரமாகவும் விளங்குகின்றது.

## பயிற்சி

1. முறிகண்டி விநாயகர் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
2. முறிகண்டிப் பிள்ளையாரின் சிறப்பு யாது?
3. முன்னேஸ்வர ஆலயத்தின் இறைவனதும், இறைவியினதும் பெயர்களைக் கூறுக.
4. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் முன்னேஸ்வர ஆலயத்திற்குச் செய்த பணி யாது?
5. இராமருக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்படக் காரணம் யாது?
6. இராமர் அதனை எவ்வாறு நீக்கினார்?

## இ. அம்மன் ஆலயம்

### காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்



இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு, தொன்று தொட்டு வழங்கி வருகிறது. சிங்கள மக்களும், தமிழ் மக்களும் கிராமியத் தெய்வமாகக் கண்ணகியை வழிபடுகிறார்கள்.

இலங்கையில் மட்டக்களப்பிலே கண்ணகியம்மன் வழிபாடு சிறப்புற்றுக் காணப்படுகிறது. காரைதீவுக் கண்ணகியம்மன் ஆலயம் மிகப்பிரசித்தமானது. இன்று இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டு, ஆகம முறையில் பூசைகள் நடாத்தப்பெற்று வந்தாலும், வைகாசி மாதச் சடங்குகள் மரபுரீதியான முறையில் நடாத்தப்படுகின்றன.

வைகாசி மாதத்தில் வரும் பூரணையை அண்மித்த திங்கட்கிழமையில், குளுத்தி பாடி, பக்தர்கள் சடங்கினை நிறைவு செய்வர். இத் திங்கட் கிழமைக்கு முந்திய எட்டு நாட் பூசையும், குளுத்தியுமே கப்புகன்மாரால் நடாத்தப்பெறுகின்றன. இச் சடங்கு காலத்தில் கண்ணகி வழக்குரை காதை படிக்கப்படுவதையும், மக்கள் மிகுந்த பயபக்தியுடன் இருந்து கேட்பதையும் காணமுடியும்.

ஏனைய கோயில்களில் இல்லாத பெரிய உடுக்கு வாத்தியம், இச் சடங்கின்போது இசைக்கப்படுவது சிறப்பம்சமாகும். குளுத்தியன்று மடைபரவி, அனைவருக்கும் கொடுத்தபின் சடங்குகள் நிறைவுக்கு வரும்.

முதலாம் கஜபாகு மன்னனால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகியம்மன் வழிபாடு, சிங்கள மக்களால் பத்தினியம்மன் வழிபாடு என அழைக்கப்படுகிறது.

கண்ணகியம்மனை வழிபட்டால் தீராத நோய்கள் நீங்கும்; வேளாண்மை சிறக்கும்; ஆடு, மாடுகள் பெருகும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. கண்ணகி அம்மன் வழிபாடு இலங்கைவாழ் சைவத் தமிழ் மக்கள் வாழ்வுடன் இணைந்துள்ளது.

## உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம்



புத்தளம் மாவட்டத்தின் உடப்பு எனும் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயச் சடங்குகள், நாட்டார் வழிபாட்டு மரபிற்குரியன. இவ் வழிபாடு மகாபாரதக் கதையுடன் தொடர்புபட்டது.

பதினெட்டுத் தினங்களுக்கு இச்சடங்குகள் மேற்கொள்ளப்படும். இத்தினங்களில் ஆலய முன்றலில் மகாபாரதம் தொடர்பான பதினெட்டுச் சம்பவங்கள் நடித்துக்காட்டப்படும். ஆண்டுக்கொரு முறை நடைபெறும் இச் சடங்குகளின்போது, உடப்புக் கிராமமே விழாக்கோலம் பூணும்.

சடங்குகள் பூசாரியினால் ஆற்றுப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் தீமிதிப்புச் சடங்கு மிக விசேடமானது. அடியார்கள் தீமிதித்துத் தம் நேர்த்திகளை நிறைவேற்றுவது பக்திபூர்வமான காட்சியாகும்.

உடுக்கு, பறை போன்ற இசைக்கருவிகள், சடங்குகளின் போது இசைக்கப்படுகின்றன. கரகம்,கும்மி முதலான கலைகள் வளர்க்கப்படும் இடமாகவும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

இன்று இவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டு, அழகிய கோபுரத்துடன் விளங் குகிறது. ஆகமமுறைப்படி பூசைகள் தினமும் நடைபெற்றாலும் ஆண்டுக்கொரு முறை நடைபெறும் சடங்குகளே மிக விசேடமானவை.

## பயிற்சி

*1. இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு சிறப்புப் பெற்றுள்ள பிரதேசம் எது?*

*2. இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?*

*3. உடப்பு திரௌபதையம்மன் ஆலயச் சடங்குகள் எத்தனை தினங்கள் இடம்பெறும்? அவற்றுள் சிறப்பான சடங்கு யாது?*

*4. உடப்பு திரௌபதையம்மன் ஆலயச் சடங்கின்போது இசைக்கப்படும் இசைக் கருவிகள் யாவை?*

*5. திரௌபதையம்மன் ஆலய வழிபாட்டுடன் தொடர்புடைய இதிகாசம் எது?*

## உகந்தை முருகன் ஆலயம்



அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் உன்னஸ்கிரி என்றும் அழைக்கப்படும். சக்திகிரி, வள்ளிகிரி, சந்நியாசிமலை ஆகிய மூன்று குன்றுகளுடன் இயற்கை எழில் கொஞ்சும் வகையில் இவ்வாலயம் தோற்றமளிக்கிறது.

சக்திகிரியில் மூலஸ்தானத்தில் முருகனது திரை காணப்படுகிறது. சந்நியாசி மலை அடிவாரத்தில் விநாயகர் அமர்ந்துள்ளார். வள்ளிமலையில் வள்ளியின் திருவுருவம் உள்ளது. தீர்த்தம் ஏழு சுனைகளாக உள்ளன. இவற்றில் சரவணப் பொய்கை, பாபநாசச் சுனை என்பன முக்கியமானவை.

மகேந்திரபுரியில் சூரன்போரை நிகழ்த்திய பின், திருச்செந்தூர் திரும்பும் வழியில் ''இவ்விடம் எமக்கு உகந்தது'' என்று கூறி, முருகன் தங்கிய இடமாகையால் உகந்தை மலை என அழைக்கப்படுகிறது.

இங்கு பிரசாதமாக அவல் வழங்கப்படுகிறது. ஏழு சுனைகளிலும் நீராடி, ஏழு ஜென்ம பாவங்களையும் அடியார்கள் நீக்குவர்.

ஆலயத்துக்குச் செல்லும் வழியில் இரு மருங்கிலும் சித்தர்களின் சமாதிகள் பல காணப்படுகின்றன. வள்ளிகிரியை அண்மித்ததாகக் கடல் காணப்படுகிறது. கடலினது இரைச்சல், வள்ளிக்குத் துன்பம் தராதிருக்க கடலரசனை அமைதியாக இருக்கும்படி முருகன் கூறியதால், கடல் அமைதியாகக் காணப்படுகிறது என்பது ஐதீகம்.

முருகனும் வள்ளியும் கதிர்காமத்திலிருந்து பயணஞ்செய்து வந்த தங்கத் தோணி, கடலோரத்தில், கல்லுருவாகிக் கவிழ்ந்து காணப்படுகிறது. முருகனும் வள்ளியும் தங்கி ஓடியாடி விளையாடிய தடங்கள், வள்ளி மஞ்சள் தேய்த்துக் குளித்த தடங்கள் என்று பல தடயங்கள் உள்ளன என்று கூறப்படுகின்றது.

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் கதிர்காமத் திருவிழாவுடன் தொடர்புடையது. கதிர்காம யாத்திரை வரும் அடியார்கள் உகந்தை முருகன் ஆலயத்தில் தங்கிச் செல்வது வழமை.

## கதிர்காமம்



தென் இலங்கையில் மொனராகலை மாவட்டத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இது மிகவும் புராதனமான பாத யாத்திரைத் தலமாக உள்ளது. இவ்வாலயம் 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது.

எல்லாள மன்னனைப் போரில் வென்ற துட்டகைமுனு மன்னன், இவ்வாலயத்தில் தன் நேர்த்திக் கடனை நிறைவேற்றியதாக ‘மகாவம்சம்’ எனும் வரலாற்று நூல் கூறுகிறது.

இவ்வாலயத்தின் கருவறை திரையால் மூடப்பட்டுக் காணப்படும். பூசாரியைத் தவிர வேறு யாரும் உட்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பூசாரி பக்தி சிரத்தையுடன் வாய்கட்டிப் பூசை செய்வார். திருவிழாக் காலங்களில் உள்ளிருக்கும் யந்திரத் தகட்டை, வெள்ளைத் துணியால் மூடி பேழையொன்றில் வைத்து யானைமீது ஊர்வலமாக எடுத்துச் செல்வர்.

இங்கு பிள்ளையார், தெய்வயானை, வள்ளி ஆகியோருக்குத் தனித்தனிக் கோயில்கள் உள்ளன. தீர்த்தம் மாணிக்க கங்கை. வருடாந்த உற்சவம் ஆடி மாதத்தில் இடம் பெறும்.

கதிர்காம ஆலயத்திற்குச் செல்பவர்கள் செல்லக்கதிர்காமத்திற்கும் சென்றுவருவது வழமையாகும். அடியார்கள் தங்குவதற்குப் பல மடங்களும் இங்கு உள்ளன.

கதிரமலையைச் சூழ பல சித்தர்களின் குகைகளும், சமாதிக் கோயில்களும் அமைந்துள்ளன. கதிர்காமத்தில் அநேகர் கற்பூரச்சட்டி எடுத்து தம் நேர்த்திகளை நிறைவேற்றுவர். இதனால் இம்முருகனைக் கற்பூரக்கந்தன் என்றும் அழைப்பர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் கதிர்காமத் தலத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். நம் நாட்டைச் சேர்ந்த நவாலியூர் சோமசுந்தரப் புலவரும்,

‘கதிரமலை காணாத கண் என்ன கண்ணே
கற்பூர ஒளி காணாக் கண் என்ன கண்ணே’

எனப் பாடியுள்ளார்.

## உ. விஷ்ணு ஆலயம்

### வல்லிபுர ஆழ்வார் ஆலயம்



யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறைக்கு அண்மித்ததாக இவ்வாலயம் உள்ளது. ஏனைய விஷ்ணு ஆலயங்களில் மூல மூர்த்தியாகத் திருமால் நின்ற கோலத்திலோ, பள்ளி கொள்ளும் கோலத்திலோ காணப்படுவார். இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் விஷ்ணுவின் சுதர்சன சக்கரம் காணப்படுகிறது இது பஞ்சலோகத்தாலானது.

இங்கு சக்கரத்தைத் தாபித்து வழிபடுவதற்குக் காரணமான செவிவழிக் கதையொன்று உள்ளது. பாரத நாட்டில் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த இலவல்லி எனும் பெண், புத்திரப் பேறற்று வருந்தினாள். அவள் சிவனை நோக்கித் தவஞ் செய்தாள். சிவன் அவள் முன் தோன்றி ''நீ ஈழநாட்டில் பிறப்பாய்; அங்கு திருமால் உன்னை ஆட்கொண்டு குழந்தைப் பேற்றினைத் தந்தருள்வார்'' என்று கூறி மறைந்தார்.

பின் இலவல்லி, பருத்தித்துறைப் பகுதியில் வல்லிபுரம் எனுமிடத்தில் பிறந்து வளர்ந்து, திருமணமாகி திருமாலை வழிபட்டு வந்தாள். அக்காலப் பகுதியில் விஷ்ணு மீனாகத் தோன்றி கடலில் மீனவர்களுக்குப் பெருந்தொல்லை கொடுத்து வந்தார். ஒரு நாள் இலவல்லி இயற்கையை இரசிக்க விரும்பிப்

படகிலேறிக் கடலில் சிறிது தூரம் சென்றாள். அவ்வேளை கடலில் இருந்த மீனொன்று அவள் மடியில் பாய்ந்து குழந்தையாக மாறியது. கைகளில் சங்கு சக்கரத்துடன் தோன்றிய அக்குழந்தையைப் பார்த்தவுடன் இலவல்லி தன் பூர்வீக பலனை நினைந்து மகிழ்ந்தாள்.

இறுதியில் அம்மீன், சக்கரத்தை இலவல்லிக்கு அளித்துவிட்டு மறைந்தது. இலவல்லி தன்முன்னே மீனாகவும் குழந்தையாகவும் காட்சியளித்த மாயவன் அருளிய சக்கரத்தை வல்லிபுரத்துக்குக் கொண்டு வந்து ஆலயம் அமைத்து அதனை நிறுவி வழிபட்டு வந்தாள் என்பது ஐதீகம்.

இவ்வாலயத்தின் நான்கு திசைகளிலும், நான்கு திருவாசல்கள் உள்ளன. கிழக்கு வாசலில் இராஜகோபுரம் அமைந்துள்ளது. மகா மண்டபத்தில் தெற்கு நோக்கியபடி பூமாதேவி, ஸ்ரீதேவி சமேதராக விஷ்ணு வீற்றிருக்கிறார்.

இங்கு தினமும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. நைமித்திய கிரியைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. புரட்டாதிமாத அமாவாசையில் தொடங்கும் மகோற்சவம் பதினேழு தினங்கள் நடைபெறும். 16 ஆம் நாள் நடைபெறும் சமுத்திரத் தீர்த்தம் மிக விசேடமானது.

## பயிற்சி

1. உகந்தை முருகனாலயத்திற்கு அப்பெயர் ஏற்படக் காரணம் யாது?
2. கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பூசை செய்பவர் யார்?
3. கதிர்காமத்தில் பூசை எவ்வாறு நடைபெறும்?
4. வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மூலமூர்த்தி யாது?
5. வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவத்தில் விசேடமாக நடைபெறும் திருவிழா யாது?

## குழுச் செயற்பாடு

அ. உங்களுக்கு அண்மையிலுள்ள ஆலயத்திற்குச் சென்று, அதன் வரலாற்றைக் கேட்டறியுங்கள்; சுருக்கமாக எழுதுங்கள்; வகுப்பறையில் முன்வையுங்கள்.

ஆ. அருணகிரிநாதர் கதிர்காமக் கந்தனைப் போற்றிப் பாடிய திருப்புகழ் ஒன்றை மனனஞ்செய்து ஒப்புவியுங்கள்.